# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● மே 11, 2024

Weekly E-paper ● May 11, 2024


## சாதித்தார் ஸ்டாலின்!

### இது சொல்லாட்சியல்ல, செயலாட்சி!

காசு.நாகராசன்



**பேரவை பொறுப்பாளர்கள் நியமனம்**

**கடவுள், மதம் ஒழிந்தால்தான் ஜாதி ஒழியும்!**

தலையங்கம்

**அன்னை நாகம்மையார்: பெரியாரின் மனைமாட்சி**

முனைவர் ரமேஷ் தங்கமணி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● மே 11, 2024 Weekly E-paper ● May 11, 2024


# சாதித்தார் ஸ்டாலின்!
## இது சொல்லாட்சியல்ல, செயலாட்சி!

**காசு. நாகராசன்**

2021 ஆம் ஆண்டுப் பிறப்பே நெருக்கடியான சூழலிலே தான் உதயமானது. 2020 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் தீவிரம் காட்டிய கொரோனோ பெரும் தொற்று, அந்த ஆண்டு முழுவதும் உலகையே புரட்டிப் போட்டது. உலகின் ஏனைய நாட்டுத் தலைவர்கள் எல்லாம், ஆட்சியாளர்கள் எல்லாம் மருத்துவ அறிஞர்களையும் அறிவியலாளர்களையும் அழைத்துப் பேசி, ஆலோசனை நடத்தி, மக்களைக் காத்திடும் முயற்சியில் போராடிக் கொண்டிருந்த போதுதான், 2021 மே 2 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகின.



மே ஏழாம் நாள், "முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்" என்கிற உணர்ச்சிகரமான திராவிட முழக்கம் ஓங்கி முழங்கியது 6ஆவது முறையாக சென்னை ஆளுநர் மாளிகையில்.

பதவியேற்பு என்கிற படாடோபம் ஏதுமின்றி, அரை மணி நேர எளிய விழாவாக மாண்புமிகு ஸ்டாலின் முதல்வர் பொறுப்பேற்று இன்றோடு ஆண்டுகள் மூன்றும் கடந்தது.

மகளிர் இலவசப் பேருந்துப் பயணம்,

ஆவின் பால் விலைக் குறைப்பு, கொரோனா நிவாரணம் உள்ளிட்ட முதலமைச்சரின் முதல் கையெழுத்துகள் தொடங்கி, மகளிர் உரிமைத்தொகை, தமிழ்ப் புதல்வன் திட்டம் வரை தீட்டப்பட்டுள்ள திட்டங்கள் ஒவ்வொன்றும் அடுத்த அரை நூற்றாண்டு காலத்திற்குத் தமிழ்நாட்டை முன்னோக்கி அழைத்துச் செல்லக் கூடியவை..

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பது வெறும் பெயர்ச் சொல் அல்ல... அது, வினைச்சொல்.

இந்திய மக்கள் அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி இலவசம்" என்று இந்தியத் தலைமை அமைச்சர் அறிவித்த அறிவிப்பு.

இது தானாக வந்த அறிவிப்பு அல்ல இந்த அறிவிப்பை வெளியிடுகிற அளவிற்குப் புதுதில்லியை நெருக்கிப் பணிய வைத்தவர் நம்முடைய திராவிட மாடல் முதலமைச்சர் தான்.

முதலமைச்சர் பொறுப்பேற்ற மறுநிமிடமே,

"உடனடியாகத் தடுப்பூசிகளை வழங்கி நாட்டு மக்களைக் காக்கும் மகத்தானப் பணிகளுக்கு உதவுக" என்று இந்தியப் பிரதமருக்குக் கடிதம் எழுதினார். ஆனால், உயிர் காக்கும் மருந்துகளுக்கு விலை நிர்ணயம் செய்கிற தரகு பேரத்தில் இருந்த இந்தியப் பிரதமருக்கோ தமிழ்நாட்டு முதலமைச்சரின் கடிதத்திற்குப் பதில் எழுத நேரமில்லை.

அடுத்த ஆயுதத்தைக் கையில் எடுத்தார். சர்வதேசத் தடுப்பூசித் தயாரிப்பு நிறுவனங்களிடம் டெண்டர் கோரினார் தமிழ்நாட்டு முதலமைச்சர்.

"தமிழ்நாட்டுக்குத் தடுப்பூசிகள் கொள்முதல் செய்ய வேண்டி உள்ளது. உங்கள் விலை நிலவரம் உள்ளிட்ட நடைமுறை விவரங்களைத் தாருங்கள்! அவசரம்!" என்றார்.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

## முன் பக்கத்தொடர்ச்சி

கார்ப்பரேட்டுகளின் லாபக் கணக்குகளில் இந்திய மக்களின் விலைமதிப்பற்ற உயிர்கள் பறிபோய்க் கொண்டிருப்பது குறித்த கவலை ஏதுமின்றி இருந்த இந்தியப் பிரதமருக்கு இரண்டாவது கடிதம் எழுதினார் முதலமைச்சர் ஸ்டாலின்.

"நாங்களே தடுப்பூசி தயாரித்துக் கொள்கிறோம். தாம்பரம் தடுப்பூசி மையத்தைத் திறந்து விடுங்கள்!" என்பதுதான் இரண்டாவது கடிதத்தின் செய்தி. முதலமைச்சரின் கடிதத்தால் தடுமாறிப் போனார். 'திருடனைத் தேள் கொட்டிய கதை' என்று சொல்வார்களே! அப்படியொரு இக்கட்டில் சிக்கினார் இந்திய பிரதமர் மோடி.

பிரதமருக்குத் தேர்தல் பத்திரம் கொடுத்தவன் தடுப்பூசி ஒன்றுக்கு ரூபாய் 500, 600 என்று பேரம் பேசினான். சர்வதேச நிறுவனங்களோ "தமிழ்நாடு அரசுக்குத் தடுப்பூசி வழங்க வேண்டும் விதிகளைத் தளர்த்துக!" என்றன. தமிழ்நாட்டு முதலமைச்சரோ, "நாங்களே தடுப்பூசி தயாரித்துக் கொள்கிறோம் அனுமதி கொடு" என்கிறார். இப்போது என்ன செய்வது? வேறு வழியே இல்லை! இந்திய மக்கள் அனைவருக்கும் இலவசத் தடுப்பூசி வழங்குவதென அந்த மன்கீபாத் அறிவித்தது.

இப்போது,

பத்தாண்டு கால ஃபாசிச நெருக்கடியில் இருந்து இந்தியாவின் ஜனநாயகத்தையும், பன்முகத்தன்மையையும், அரசியலமைப்பையும் பாதுகாக்க, 2024 நாடாளுமன்றத் தேர்தல் களத்தில், சமூக நீதி நோக்கில் "இண்டியா" கூட்டணி என்கிற மகத்தான ஒற்றுமையைக் கட்டிச் சிதைவுகள் இன்றிப் பாதுகாத்து "இந்தியாவைக் காக்க ஸ்டாலின் அழைக்கிறேன்" என்று அழைப்பு விடுத்தார்.

குமரி முனையில் இருந்து காஷ்மீர் பள்ளத்தாக்கு வரையும் அரபிக் கடலிலிருந்து மணிப்பூர் மலைமுகடுகள் வரையும் ஸ்டாலினின் குரலைக் கேட்டு மக்கள் இந்தியாவைக் காக்க அணி திரண்டு நிற்கிறார்கள்! ஆம், "சொல்லுதல் யார்க்கும் எளிய" ஆனால் "செயல் ஒன்றே சிறந்த சொல்!" என்று நிரூபித்து விட்டார் திராவிடமாடல் ஆட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இவரின் ஆட்சி, சொல்லாட்சி அல்ல... செயலாட்சி!!

# பேரவை பொறுப்பாளர்கள் நியமனம்

## மதுரை மாவட்டம்

**தலைவர்**

மருத்துவர் சந்திரன்.

**துணைத் தலைவர்கள்**

பேராசிரியை சாந்தி,
தம்பி அழ.பிரபு.

**செயலாளர்**

வழக்கறிஞர் பி.அமர்நாத்.

**துணைச் செயலாளர்கள்**

தோழர் முருகன்,
தோழர் பெரியார் மருது.

**பொருளாளர்**

தோழர் ஸ்டுடியோ சு.சரவணன்.

**மாவட்ட இளைஞரணித் தலைவர்**

தோழர் பா.பகலவன்.

**மாவட்ட இளைஞரணிச் செயலாளர்**

தோழர் பி.கார்த்திகேயன்.

**இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர்**

தோழர் சொக்கலிங்கம்.

## இராமநாதபுரம் மாவட்டம்

**மாவட்ட அமைப்பாளர்**

தோழர் மேகவண்ணன்.

## தென்காசி மாவட்டம்

**மாவட்ட அமைப்பாளர்**

வழக்கறிஞர் அருள் ஜோதி.

- சிற்பி செல்வராசு,
(பொதுச் செயலாளர்)

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## கடவுள், மதம் ஒழிந்தால்தான் ஜாதி ஒழியும்!

சேலம் மாவட்டம், ஓமலூர் அருகே தீவட்டிப்பட்டியில் நடைபெற்றுள்ள ஜாதிய வன்முறையானது, தமிழ்ச்சமூகம் ஜாதி என்ற கொடுமையின் பிடியில் இருந்து மீண்டு வர இன்னும் எத்தனை காலம் ஆகுமோ என்ற கேள்வியுடன் கூடிய துயரத்தைத் தந்து சென்றுள்ளது.

அங்கு நடைபெற்ற கோயில் திருவிழாவில் பட்டியலின மக்கள் கலந்து கொள்வதற்குத் தடை செய்ததோடு, அவர்கள் தாக்கப்பட்டுமிருக்கின்றனர்.


கடவுளின் பெயரால் முட்டாள்தனங்களும், மூடநம்பிக்கைகளும் பெருகுவதோடு இதுபோல மனிதனை மனிதன் தாழ்த்துவதைக் கண்டித்துத்தானே ஜாதி ஒழிய வேண்டும், மதம் ஒழிய வேண்டும் என்று பிரச்சாரம் செய்தார் பெரியார். கடைசியில் மனிதனைக் காக்க, கடவுளும் வர மாட்டார்; ஏனென்றால் கடவுளுக்கே இங்கு பாதுகாப்பு இல்லை என்பதை விளக்கத்தானே "கருப்பண்ணசாமி யோசிக்கிறார்" என்ற அருமையான சிறுகதை ஒன்றை அறிஞர் அண்ணா எழுதினார்.

அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் தீண்டாமையை மட்டும் ஒழித்தால் போதாது, ஜாதியும் ஒழிக்கப்பட வேண்டும் என்று முழக்கமிட்டு, அச்சட்டத்தைத் தீயிலிட்டுக் கொளுத்திய பெரியாரின் வார்த்தைகள், கோரிக்கைகள் எவ்வளவு முக்கியமானவை. அவை நிறைவேற்றப்பட வேண்டுமா இல்லையா?

இந்த நேரத்தில் குற்றவாளிகளை அடையாளம் கண்டு அவர்களைச் சட்டத்தின் முன்பாக நிறுத்துவதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான அரசின் தலையாய கடமை. அதே நேரம், தமிழகத்தின் முற்போக்கு இயக்கங்கள், குறிப்பாக திராவிட இயக்கங்கள், பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோரின் பகுத்தறிவுக் கருத்துகளை இன்னும் தீவிரமாக மக்களிடையே கொண்டு சேர்க்க முனைந்து பணியாற்ற வேண்டும். சமூகத்தில் மாற்றம் ஏற்படாமல் வெறும் சட்டங்களைக் கொண்டு சமூகத்தில் மாற்றத்தைக் கொண்டு வர இயலாது.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408



" திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" வழங்கிய ராபர்ட் கால்டுவெல் பிறந்த நாளை முன்னிட்டு 07-05-2024 அன்று கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் 'தமிழுக்கு என்ன செய்தார் கால்டுவெல்', 'திமுகவின் மாநில சுயாட்சித் தீர்மானம்' ஆகிய இரண்டு நூல்களைப் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள் வெளியிட, தோழர்கள் 'பெல்' ராஜன், ஆ.லாரன்ஸ் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். உடன் தோழர்கள் இக்லாஸ், லோகபாலன் ஆகியோர்.

# அன்னை நாகம்மையார்: பெரியாரின் மனைமாட்சி

முனைவர் ரமேஷ் தங்கமணி

பண்டைய இந்திய சமூகக் கட்டமைப்பில் பெண்களின் வாழக்கைத் தரம் என்பது மிகவும் கீழான அளவிலேயே வரையறை செய்யப்பட்டிருந்தது. அவ்வாறான ஒரு வரையறையை ஏற்படுத்தியதில் முக்கிய பங்கு வகிப்பது மனுஸ்மிருதியும் அதற்கு அடிப்படையாக அமைந்த வர்ணாசிரம முறையும் ஆகும். பெண்கள் அனுபவித்த இந்தச் சமூக அவலத்திற்கு எதிரான எதிர்ப்புக் குரல்கள் 19-ஆம் நூற்றாண்டின் மையப்பகுதியில் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் வலுப்பெறத் தொடங்கியது. தமிழக அரசியல் பரப்பில் முதன்முதலில் பெண்ணடிமைத்தனம் அதற்கு காரணமான மூடநம்பிக்கை, மனுதர்மம், சாதி, பார்ப்பனிய ஆதிக்கம் மற்றும் மதத்திற்கு எதிராக காத்திரமாக தன்னுடைய எதிர்ப்பை பதிவு செய்து கொள்கை தீபம் ஏந்தி போராடியவர் தந்தை பெரியார் அவர்கள். பெரியார் அவர்கள் பெண்ணடிமைத்தனத்திற்கு எதிரான தன் கருத்துக்களை வெறும் சொல்லோடு நிறுத்திவிடாமல், தன் மனைவி, தங்கை மற்றும் பிற பெண்களையும் போராட்டத்தில் பங்கேற்க செய்ததன் மூலம் போராட்டத்தின் செயல் வடிவமாகவும் நின்றார். அவ்வாறு போராட்டக் களத்தில் பெரியாரோடு தோளோடு தோள் நின்றவர்களில் குறிப்பிடத்தகுந்தவர், அவருடைய வாழ்வின் சக பயணியும், தோழியும், வாழ்க்கைத் துணைநலனுமான அன்னை நாகம்மையார். சமூக அவலத்துக்கு எதிரான பல போராட்டங்களில் பெரியாரோடு களம் கண்ட அன்னை அவர்கள் 11.5.1933 அன்று தன்னுடைய 48-ஆம் வயதில் மறைந்தார். அன்னை அவர்களின் 91-ஆம் ஆண்டு நினைவு நாளில் அவரின் கொள்கைப் பற்றுள்ள சமூக பணியினை நினைவு கூர்வது என்பது அவரின் சேவையை இளைய தலைமுறையினர் மீள் நினைவு கொள்ள வாய்ப்பாக அமையும்.

### வாழ்க்கைக் குறிப்பு:

அன்னை நாகம்மையார் அவர்கள் பெண்ணடிமைத்தனம், மூடநம்பிக்கை தலைவிரித்தாடிய பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியான 1885-ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திலுள்ள தாதம்பட்டி என்ற ஊரைச் சார்ந்த அரங்கசாமி மற்றும் பொன்னுத்தாய் தம்பதியர்களுக்கு மகளாய்ப் பிறந்தார். அன்னை அவர்கள் முறையான கல்வியைப் பெறவில்லை. பெரியாருடைய தாயாரின் ஒன்று விட்ட தம்பி மகளான இவர், அக்கால வழமையின் படி 1898-ம் ஆண்டு தனது 13-வது வயதில் தன் சுயவிருப்பத்தின்படி பெரியாரை மணம் புரிந்தார்.




04-05-2024 அன்று சென்னை அன்பகத்தில் பேரவை சார்பாக ‘‘கால்டுவெல், காரல்மார்க்ஸ், பாரதிதாசன் பிறந்தநாள் விழா’’ நடைபெற்றது. சிறப்புரை தோழர்கள் வாலாசா வல்லவன், சிந்தன் மற்றும் தமிழ் கா.அமுதரசன். தலைமை உமா. தொகுப்பு கார்த்தி. வரவேற்பு ப.எட்வின். நன்றியுரை திராவிடமணி.

### சுதந்திர போராட்டச் செயற்பாடுகள்:

1919ஆம் ஆண்டு பெரியார், இந்திய தேசிய காங்கிரசில் இணைந்து, காந்தியார் அறிவித்த 'ஒத்துழையாமை இயக்கத்தில்' தீவிரமாக ஈடுபட்டபோது, நாகம்மையாரும் அவரோடு இணைந்து போராட்டங்களில் கலந்து கொண்டார்.

### சமூக செயற்பாடுகள்:

ஈரோட்டில் நடந்த கள்ளுக்கடை மறியல் போராட்டத்தில் பெரியாருடன் இணைந்து நாகம்மையாரும் பெரியாரின் தங்கை கண்ணம்மாளும் கலந்து கொண்டனர். பிரிட்டிஷ் அரசு விதித்திருந்த 144 தடை உத்தரவினை மீறி போராட்டத்தில் ஈடுபட்டதால் பெரியார் கைது செய்யப்பட்டார். அதுசமயம் நாகம்மையாரும் பெரியாரின் தங்கையும் பல பெண்களுடன் சேர்ந்து மறியலை முன்னின்று நடத்தினர். பெண்கள் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டது இந்திய வரலாற்றிலேயே அதுதான் முதல்முறை என்பதால் காந்தியாரின் பாராட்டுதலைப் பெற்றனர்.

அனைத்திந்திய காங்கிரஸ் செயற்குழு உறுப்பினராகத் திருச்சியில் 4.12.1923 அன்று நடைபெற்ற மாகாண காங்கிரஸ் முதலாவது கமிட்டி கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழகத்தைச் சார்ந்த முதல் பெண்மணி நாகம்மையார் ஆவார்.

1924ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் நாள், வைக்கம் கோவில் நுழைவுப் போராட்டத்தில் பெரியாருடன் பங்கேற்ற நாகம்மையார் அதற்காக மே 1924 இல் கைது செய்யப்பட்டார். பெரியாரின் கைது குறித்தும் வைக்கம் போராட்டத்தைத் தொடர வேண்டியதன் அவசியத்தைக் குறித்தும் 12, செப்டம்பர் 1924-இல் வெளிவந்த காங்கிரஸ் ஏடான நவசக்தியில் நாகம்மையார் பதிவு செய்திருக்கிறார்.

குடி அரசு ஏட்டின் பதிப்பாளராக 1924ஆம் ஆண்டில் தன்னைப் பதிவு செய்தவர் நாகம்மையார். 1928ஆம் ஆண்டில் ரிவோல்ட் என்ற ஆங்கில இதழின் ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் இருந்தார்.

1929-ம் ஆண்டுகளில் சாதி மறுப்பு மற்றும் விதவைத் திருமணங்கள் பலவற்றை நாகம்மையார் தலைமையேற்று நடத்தினார்.

### திராவிட அன்னை

பெரியார் – நாகம்மையார் தம்பதியினருக்கு ஒரு குழந்தை பிறந்து ஐந்து மாத காலத்தில் இறந்து விட்டது. அதன்பிறகு சுயமரியாதை இயக்க தோழர்கள் அனைவரையும் தன் குழந்தையாக பாவித்த அன்னையாகவே விளங்கினார். நாகம்மையாரின் விருந்தோம்பல் பண்பினை திரு.வி.க, ராஜாஜி மற்றும் திருமதி சாமி சிதம்பரனார் போன்றோர் பதிவு செய்துள்ளனர்.

### அன்னையின் மறைவு:

சுதந்திர மற்றும் சமூகப் போராட்டங்களில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட அன்னை அவர்கள் 1933ஆம் ஆண்டு மே 11ஆம் நாள் ஈரோட்டில் மறைந்தார். அவர் மறைவிற்கு பெரியார் எழுதிய இரங்கற் கட்டுரை பிரசித்தி பெற்றது.

பெண்ணுரிமை சார்ந்த கருத்துக்களில் பெரியாரின் பேச்சுக்கும், எழுத்துக்கும் செயலுக்கும் முரண் என்பதே வந்தது இல்லை எனலாம். இத்தகைய ஒருமித்த தன்மையினை எட்ட ஆரம்பகாலத்தில் உறுதுணையாக இருந்தவர் அன்னை நாகம்மையார். இவ்வாறாக கொள்கை உரம், அன்பு, முற்போக்கு சிந்தனை, கணவரோடு இயைந்த வாழ்வு போன்ற உயர் குணங்களைக் கொண்ட அன்னை நாகம்மையார் அவர்களை பெரியாரின் மனைமாட்சி (இல்வாழ்க்கையின் பெருமை) என்றால் அது மிகையில்லை.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian